சிதம்பரம் நகராட்சி

2022 ம் ஆண்டு ஆடி திங்கள் 13–ம் நாள் 29.07.2022 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம்

மன்றக்கூட்டப் பொருள்

1) நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜூலை–2022–ம் மாத நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம்.

2) சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 2021-2024 வரை குத்தகை இனங்களை பெரியண்ணா குளம் மற்றும் ஞானப்பிரகாசம் குளம் மீன் பாசி எடுக்கும் உரிமம் தற்போது பராமரிப்பு பணி காரணமாக குத்தகைதாரகள் நகராட்சிக்கு 06.06.2022 முதல் ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட பராமரிப்பு பணி முடியும் காலம் வரையும் மேலும் குளம் தூர் வாரப்பட்டு சீரமைப்பு பணிகள் முடியும் வரை மீன் பாசி எடுக்க முடியாத காரணத்தினால் ஆண்டு ஏலத்தினை தற்காலிகமாக நிறுத்திவைக்கவும் இக்காலத்திற்கு நகராட்சிக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகை கேட்புகளை ரத்து செய்திடவும் கணினியில் நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4797/2020/அ1)

3) சிதம்பரம் நகராட்சி தெற்கு ரத வீதி, சர்வே வார்டு எண்.5, பிளாக் எண்.5 நகரளவு எண்.300 கதவு எண்.71–ல் இயங்கி வரும் தரைதளம் இந்தியன் வங்கி, முதல் தளம் குடியிருப்பு பகுதி கட்டிடம் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக வரப்பட்ட புகார் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் முறைமன்றம் நடுவம் உத்தரவின்படி, பூட்டி சீல் வைப்பதற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மெஸ்ஸர்ஸ். வி.எஸ். டிரஸ்ட் நிர்வாகம், திருத்திய வரைபடம் சமர்ப்பித்து, நகராட்சியால் அனுமதி மறுக்கப்பட்டு, அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் தமிழ்நாடு மேல்முறையீடு செய்து, அம்மேல் முறையீடும் மறுக்கப்பட்டு, அரசு ஆணை எண்.30, வீட்டு வசதி மற்றும் நகர வளர்ச்சித் துறை நாள் 07.03.2022–ன்படி, நகராட்சி ஆணையர், இந்தியன் வங்கி கட்டிடத்தை பூட்டி சீல் வைப்பதற்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அவ்வறிவிப்பினை பெற்றுக்கொண்டு, சென்னை உயர்நீதிமன்றத்தில், W.P.9627/2022 எனவும், W.M.P.9369/2022 எனவும் வழக்கு தொடர்ந்துள்ளார். அவ்வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்திட திரு பி. ஸ்ரீநிவாஸ் அவர்களை அனுமதித்தும், வழக்கு செலவிற்காக ரூ.18,000/–க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) W.P.9627/2022 மற்றும் W.M.P.9369/2022 வழக்கில், ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கினை நடத்திட திரு. பி. ஸ்ரீநிவாஸ் வழக்கறிஞரை நியமனம் செய்ய அனுமதிக்கலாம்.
3) வழக்கறிஞர் கோரியுள்ள வழக்கு செலவு ரூ.18,000/– வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1149/2022/எப்1)

104 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

105 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

106 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4) சிதம்பரம் வேங்கான் தெரு, குருநமசிவாய மடத்தின் இடத்தில் வசித்துவரும் திரு B. சரவணன் மற்றும் மற்றவர்களும் சேர்ந்து நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.12358/2022–யை திரு V. ஜெயபிரகாஷ் நாராயணன் வழக்கறிஞர் அவர்கள் வசம் ஒப்படைத்து நகராட்சி சார்பில் ஆஜராகி எதிர்வாதுரை தயார் செய்து வழக்கினை நடத்திடவும் வழக்காடு கட்டணமாக மேற்படி வழக்கறிஞர் கோரிய தொகை ரூ.15,000/–யை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.122/2017/எப்1)

5) சிதம்பரம் வேங்கான் தெரு, குருநமசிவாய மடத்தின் இடத்தில் வசித்துவரும் திரு S. பழனிசாமி மற்றும் மற்றவர்கள் சேர்ந்து நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.12707/2022 –யை திரு V. ஜெயபிரகாஷ் நாராயணன் வழக்கறிஞர் அவர்கள் வசம் ஒப்படைத்து நகராட்சி சார்பில் ஆஜராகி எதிர்வாதுரை தயார் செய்து வழக்கினை நடத்திடவும் வழக்காடு கட்டணமாக மேற்படி வழக்கறிஞர் கோரிய தொகை ரூ.15,000/–யை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.122/2017/எப்1)

6) சிதம்பரம் வேங்கான் தெரு, குருநமசிவாய மடத்தின் இடத்தில் வசித்துவரும் திரு G. சேகர் என்பவர் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.12625/2022 –யை திரு V. ஜெயபிரகாஷ் நாராயணன் வழக்கறிஞர் அவர்கள் வசம் ஒப்படைத்து நகராட்சி சார்பில் ஆஜராகி எதிர்வாதுரை தயார் செய்து வழக்கினை நடத்திடவும் வழக்காடு கட்டணமாக ரூ.15,000/– யை மேற்படி வழக்கறிஞர் கோரிய தொகையை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.122/2017/எப்1)

7) சிதம்பரம் நகராட்சியை எதிர்த்து சிதம்பரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் திரு வேணு புவனேஸ்வரன், புவனா கார்டன், சிதம்பரம் என்பவரால் நகராட்சி ஆணையர், ஜீதேதிந்திர பட்டேல், திருமதி. விஜயா பட்டேல், மாவட்ட ஆட்சியர், இயக்குநர், ,கர ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், வட்டாட்சியர், கண்காணிப்பு பொறியாளர் (வெள்ளாறு) ஆகியோருக்கு எதிராக சிதம்பரம் நகராட்சி நகரமைப்பு வரை திட்டம் 5.ல் வருகிற திட்டசாலை G3, G3 மற்றும் G9, G9 ஆகியவற்றில் புல எண்.34/3 ஏ–ல் வரும் பகுதியினை நீக்க கோரியும், நகர ஊரமைப்பு துறை ஒப்புதல் வழங்கிய தொழிற்நுட்ப வரைபடத்தினை செல்லத்தக்கது அல்ல எனவும் மற்றும் G3,G3, G9,G9 சாலை பகுதியினை நகராட்சிகோ, மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கோ தான பத்திரம் முலம் ஒப்படைப்பு செய்ய கூடாது எனவும் வழக்கு தொடர்ந்து நிரந்தர உருத்து கட்டளை கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.78/2021 மேல் நடவடிக்கை தொடர கூடாது எனவும், நிரந்தர உருத்து கட்டளை கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு மற்றும் IA நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கு நடத்திட வழக்கறிஞர் **திரு A.K. நடராஜன், B.Sc., B.L.,** நியமனம் செய்து வழக்கு நடத்திட தீர்மானிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2170/2021/எப்1)

8) சிதம்பரம் நகராட்சிக்கு வரும் தபால்களும் மற்றும் இந்நகராட்சியிலிருந்து அனுப்பப்படும் சான்றிதழ்கள் மற்றும் தபால்களை அனுப்பிட தபால் வில்லைகள் (Stamps) மற்றும் கவர்கள் வாங்குவதற்கு, ஒரு வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.215/2017/டி2)

107 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

108 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

109 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

110 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

111 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9) சிறப்புப் நகராட்சி வார்டு எண். 3, பிளாக் எண். 26, நகரளவு எண். 18 பெரியகோவை குறிஞ்சி நகரைக்ப் பகுதியில் மேற்கொள்ளும் பணிக்கு கலைஞர் நகர்ப்புறமேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22-ன் கீழ் 136.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து MAWS (NS) Department G.O (ms) No.73, Date 13.05.2022-ன் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 16.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டு ஒப்பீட்டிற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் ஒரு சதவிகிதம் குறைவுத்தொகை ஒப்பந்தப்புள்ளியினை பரிசீலித்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	பணியின் விபரம்	ஒப்பந்ததாரரின் பெயர் விபரம்	மதிப்பீட்டு தொகை ரூ	ஒப்பந்தம் வீதம் குறைவு	ஒப்பீட்டு சதவிகித அதிகம்
1	2	3	4	5	6
	நகர்ப்புறமேம்பாட்டுத் திட்டம்-2021-22 (KNMT)				
	கலைஞர் நகர்ப்புறமேம்பாட்டுத் திட்டம்-2021-22 (KNMT) சிறப்புப் நகராட்சி வார்டு எண். 3, பிளாக் எண். 26, நகரளவு எண். 18 பெரியகோவை குறிஞ்சி நகரைக்ப் பகுதியில் மேற்கொள்ளுதல்.	திருமதி C.K.தேவி எண் 11, காமராஜர் வீதி, கோவில் தெரு, சிங்காரி அத்தப்பட்டி, சிறப்புப்	136.00,000/-	—	மதிப்பீட்டு விலையை விட 4.23% அதிகம்

தகுதிபெற்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை கலப் எண்.6-ல் கண்டுள்ளபடி 4.23 % மதிப்பீட்டினை விட அதிகமாக கொடுத்துள்ள திருமதி C.K.தேவி ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி வழங்கிய குறைந்த தொகையை கொடுத்துள்ள பெச்சுவார்த்தைக்குப்பின் வழங்கிய உபரான தொகுப்பில் விலைபெற்றும் மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்தி கொண்டு 0.23% குறைத்து 4.00 % மதிப்பீட்டை விட உபரியான விலைபெற்றதை பரிசீலனை செய்து கருத்து தெரிவித்துள்ளார். மேலும் ஒப்பந்ததாரரிடமிருந்து ஏற்ற பணியின் தரமான நடைபெறவும் முன் அனுபவத்தினை தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் தெரிவித்துள்ளார்.

அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் தீர்மானிக்கலாம்.

2) பணியின் தரமான நடைபெறவும் முன் அனுபவத்தினை முன் அனுமதி பெற்று தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் தெரிவித்துள்ளார்.

3) மேலும் மேலாண்மைத்தை நகராட்சி வருவாய்த்திலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2647/2021/இ1

10) சிறப்புப் நகராட்சி வார்டு எண். 4, பிளாக் எண். 14, நகரளவு எண். 1037 ஏனாதிநகரம் குறிஞ்சி நகரைக்ப் பகுதியில் மேற்கொள்ளும் பணிக்கு கலைஞர் நகர்ப்புறமேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021-22-ன் கீழ் 280.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து MAWS (NS) Department G.O (ms) No.73, Date 13.05.2022-ன் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 16.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியினை மட்டுமே பெறப்பட்டு ஒப்பீட்டிற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் 95 சதவிகிதம் குறைவுத்தொகை ஒப்பந்தப்புள்ளியினை பரிசீலித்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	பணியின் விபரம்	ஒப்பந்ததாரரின் பெயர் விபரம்	மதிப்பீட்டு தொகை ரூ	ஒப்பந்தம் வீதம் குறைவு	ஒப்பீட்டு சதவிகித அதிகம்
1	2	3	4	5	6
	நகர்ப்புறமேம்பாட்டுத் திட்டம்-2021-22 (KNMT)				
	கலைஞர் நகர்ப்புறமேம்பாட்டுத் திட்டம்-2021-22 (KNMT) சிறப்புப் நகராட்சி வார்டு எண். 4, பிளாக் எண். 14, நகரளவு எண். 1037 ஏனாதிநகரம் குறிஞ்சி நகரைக்ப் பகுதியில் மேற்கொள்ளுதல்.	திருமதி C.K.தேவி எண் 11, காமராஜர் வீதி, கோவில் தெரு, சிங்காரி அத்தப்பட்டி, சிறப்புப்	280.00,000/-	—	மதிப்பீட்டு விலையை விட 4.00% அதிகம்

175

11) அலுவலக குறிப்பு சமர்ப்பிக்கப்படுகிறது

11) அலுவலக குறிப்பு சமர்ப்பிக்கப்படுகிறது

தகுதிபெற்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை கலம் எண்.6–ல் கண்டுள்ளபடி 4.23 % மதிப்பீட்டுவிலையை விட அதிகத்தில் குறைவாக கொடுத்துள்ள திருமதி.கே.மீனா, ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தபுள்ளி சதவீதத்தை குறைத்து கோரியதன்படி, பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்தப்புள்ளி சதவீதத்தை கட்டுமான பொருட்களின் விலையேற்றம் மற்றும் ஆட்கள் கூலி ஆகியவற்றை கருத்தில் கொண்டு 0.23% குறைத்து 4.00 % மதிப்பீட்டைவிட கூடுதலான விலைவிகிதத்தில் பணியினை செய்துதர சம்மத கடிதம் அளித்துள்ளார். குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3) கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய்நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2647/2021/இ1

114 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

11) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சிதம்பரம் நகராட்சிக்கு பல்வேறு திட்டப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து ஓராண்டு சாதனை பணிக்காக கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022–23–ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	நாளிதழ் விபரம்	விளம்பர நாள்	தொகை
1	தினகரன்	25.05.2022	40000
		கூடுதல்	40000

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0004/2022/இ1)

115 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

12) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சிதம்பரம் நகராட்சிக்கு பல்வேறு திட்டப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்துஓராண்டு சாதனை பணிக்காக கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022–23–ன்கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	நாளிதழ் விபரம்	விளம்பர நாள்	தொகை
1	தினதந்தி	25.05.2022	45045
		கூடுதல்	45045

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0004/2022/இ1)

116 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

13) சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான 1) தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் வண்ணத் தொலைக்காட்சி விளம்பர உரிமம் 2) தந்தை பெரியார் பேருந்து நிலையத்தில் பொருட்கள் பாதுகாக்கும் அறை உரிமம் மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்சொன்ன பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை நாளிதழில் விளம்பரம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2022/அ1)

14) சிதம்பரம் நகராட்சியில் 08.06.2022 அன்று தினகரன் நாளிதழில் வெளியான சிதம்பரம் நகராட்சி அலுவலக குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் 14.04.2022 என்பதை 14.06.2022 மாற்றி விளம்பரம் கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022–23–ன்கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	நாளிதழ் விபரம்	விளம்பர நாள்	தொகை
1	தினகரன்	11.06.2022	1050
		கூடுதல்	1050

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0004/2022/இ1)

15) சிதம்பரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22 (KNMT)–ன்கீழ் ரூ.419.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு குளங்களை தூர்வாரி மேம்பாடு செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கீழ்காணும் நாளிதழில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022–23–ன்கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	நாளிதழ் விபரம்	விளம்பர நாள்	தொகை
1	Flame Advertising company Pvt. Ltd, Chennai.	09.06.2022	69615
		கூடுதல்	69615

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0004/2022/இ1)

16) சிதம்பரம் நகராட்சி மூலதன மானிய நிதி 2021–22 (CGF)–ன்கீழ் ரூ.46.75 இலட்சம் மதிப்பீட்டில் Supply, Erection and Commissioning of Online Effluent Quality Monitoring Station for Measurement of BOD, COD TSS, pH and Flow at 9.44 MLD STP at Lalpuram for Chidambaram Municipality பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022–23–ன்கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	நாளிதழ் விபரம்	விளம்பர நாள்	தொகை
1	தினகரன்	08.06.2022	21000
		கூடுதல்	21000

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0004/2022/இ1)

17) சிதம்பரம் நகராட்சியில் குடிநீர் வழங்கல் மற்றும் விநியோக பராமரிப்பு, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளில் பயன்படுத்தப்பட்ட உபயோகமற்ற உதிரிபாகங்களை அந்தந்த நிலையிலேயே பொது ஏலம் மூலம் அகற்றிடும் பணிக்காக கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022–23–ன்கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	நாளிதழ் விபரம்	விளம்பர நாள்	தொகை
1	தினசெய்தி	15.05.2022	15000
		கூடுதல்	15000

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1973/2022/இ1)

117 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

118 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

119 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

120 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

18) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு சார்பாக திடக்கழிவு மேலாண்மை விதிகள் - 2016 மற்றும் தூய்மை இந்தியா திட்டம் - 2.0 - ன் படி நகர்ப் பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்குவதற்கு இந்நகராட்சியில் 21(BOV) வாகனங்கள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன அவற்றில் 4(BOV) வாகனங்கள் பழுதடைந்துள்ளது. அவ்வாகனங்களை பழுது நீக்கம் செய்ய இயலவில்லை. இதனால் தூய்மைபணியாளர்கள் வீட்டுக்கு வீடு குப்பைகளை சேகரிப்பதில் பல்வேறு சிரமங்களை சந்திக்கின்றனர். 33 வார்டுகளில் குப்பைகளை பிரித்து வாங்குவதற்கு வாகனங்கள் பற்றாக்குறையாக உள்ளது. எனவே தூய்மை பணி பாதிப்படையாமல் இருக்க வரும் மழைக்காலத்தை முன்னிட்டு தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு தூய்மை பணிக்காக மூன்று சக்கர ரிக்ஷா வாகனங்கள் தேவைபடுகின்றன. மூன்று சக்கர ரிக்ஷா வாகனங்களை வாங்குவதற்கு செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

1) மூன்று சக்கர ரிக்ஷா வாகனங்கள் எண்ணிக்கை 15

அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவின தொகை நகராட்சி நமக்கு நாமே திட்டத்தில் (அ) நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1201/2021/எச்.1)

19) சிதம்பரம் நகராட்சிக்கு தினமணி, தினமலர், தினதந்தி, இந்து (தமிழ்) தினகரன் மற்றும் புக்ஸ் 01.07.2021 முதல் 31.03.2022 வரை தினசரி வழங்கியதற்கு வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022–23–ன்கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	நாளிதழ் விபரம்	தினசரி தமிழ் நாளிதழ்கள் பெறப்பைட்ட காலம்	தொகை
1	எம்.வடிவேல், நியூஸ் ஏஜெண்ட், சிதம்பரம்.	01.07.2021 முதல் 31.03.2022 வரை	9161
		கூடுதல்	9161

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1750/2022/இ1)

20) சிதம்பரம் நகராட்சி மூலம் 1881 தெருமினவிளக்குகளும், 15 எண்கள் உயர்கோபுர மின்விளக்குகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பணிக்கு 2022–23–ம் நிதியாண்டின் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக மின் உதிரிபாகங்களை வாங்குவதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.9.75 இலட்சத்திற்கு ஆகும். இதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணிக்கான செலவினத்தினை 2022–23–ம் நிதியாண்டு வருவய் நிதியில் வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2022/இ1)

121 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

122 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

123 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

21) சிதம்பரம் நகராட்சியின் புதிய வார்டு எண் 27, எடத்தெருவில் உள்ள பழைய புதைவடிகால் கழிவு நீரேற்றும் நிலையம் 1966-ல் கட்டப்பட்டதாகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புதிய புதைவடிகால் திட்டம் செயல்பட்டில் உள்ளதால், மேற்படி இடம் பயன்பாடின்றி முட்புதர்கள் வளர்ந்து சிதலமடைந்து உள்ளது. மேற்படி இடத்தில் கிழக்கு பகுதியின் ஓரத்தில் 15-th Finance Grant - CGF - 2021-22-ன் கீழ் 25.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரோக்கியம் மையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டிடத்தின் தெற்குபகுதியில் பயன்படுத்தும் வகையிலும், மீதமுள்ள நகராட்சி இடத்தை வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தும் வகையில் தனியாக பிரித்து சுற்றுச்சுவர் (Compound wall) மற்றும் புதியகேட் அமைத்து ஒரு கழிவுநீர் கிணற்றை மூடவும் தோராய மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2022/இ1

22) சிதம்பரம் நகராட்சியில் உள்ள 33 வார்டு பகுதியிலும் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் செயல்பாட்டில் உள்ளது. குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் அடைப்புகள் ஆகியவற்றை சீர்செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும்போதும் பாதாள சாக்கடை அடைப்புகளை சீர்செய்வதற்காகவும் நகரின் பல்வேறு பகுதிகளில் சாலைகள் தோண்டப்பட்டு பணி முடித்தபின்பு மூடப்படுகிறது. அவ்வாறு தோண்டப்பட்ட சாலைகளில் ஆங்காங்கே மேடு பள்ளங்கள் ஏற்பட்டுள்ளது. மேலும் சமீபத்திய தென்மேற்கு பருவமழை காரணமாகவும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சாலைகள் சேதமடைந்துள்ளது. இதனால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு சிரமம் ஏற்படுகிறது. இதனால் விபத்துகள் ஏற்படுவதற்கான அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் போக்குவரத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஏற்ற வகையில் தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளை சரிசெய்து ஒட்டுப்பணி (Patch Work) மழைகாலத்திற்கு முன்பாக மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகிறது. இதற்கான தோராய மதிப்பீடு 9.75 இலட்சம் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2022/இ1

23) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய 13.07.2022 அன்று வருவாய் நிதி 2022-23-ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

வ. எண்.	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்	மதிப்பீட்டு தொகை ரூ.	ஒப்பந்த சதவீதம் குறைவு	ஒப்பந்த சதவீதம் அதிகம்
1	2	3	4	5	6
	வருவாய் நிதி 2022-23				
	சிதம்பரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தூய்மை பணிகள் மேற்கொள்ள தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினி விநியோகம் செய்யும் பணி.	M/s. Evergreen Fair Trade Pvt. Ltd, Loganathan Nagar, Choolaimedu, Chennai.	5,20,000/-	மதிப்பீட்டு விலையை விட 0.23 % குறைவு	
		M/s.KM Polypacks, Viswanatham, Sivakasi.		—	மதிப்பீட்டு விலையை விட 4.82 % அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5-ல் கண்டுள்ளபடி 0.23% மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. Evergreen Fair Trade Pvt. Ltd, Loganathan Nagar, Choolaimedu, Chennai, என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

124 அழுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

125 அழுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

126 அழுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2809/2022/இ1

24) இந்நகராட்சி குடிநீர் வழங்கல் பணியில் உள்ள உபயோகமற்ற பொருட்களை கழிவு செய்ய நகர்மன்ற தீர்மான எண். 21, நாள் 11.04.2022–ன்படி நிர்வாக அனுமதி பெற்று 03.06.2022 அன்று பொது ஏலம் நடைபெற்றதில் கீழ்காணும் விவரப்படி ஏலத்தொகை அளித்துள்ளார்கள்.

ஏலத்தில் கலந்து கொண்டவர்கள்	இனம் –1	இனம் –2	இனம் –3	இனம் –4	இனம் –5	இனம் –6	கூடுதல் ரூ.
திரு.ரகுபதி	77810.00	44720.00	2160.00	1493.50	44640.00	39975.00	210798.00
திரு.சுல்தான்	75300.00	43860.00	2130.00	1467.75	43400.00	38025.00	204182.75
திரு.சோம சுந்தரம்	76555.00	43430.00	2070.00	1442.00	44020.00	39000.00	206577.00

(ரூபாயில்)

மேற்காணும் விவரப்படி இந்த பொது ஏலத்தில் மூன்று நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டதில் ஆறு இனத்திற்கு திரு.P.ரகுபதி என்ற ஏலதாரரின் உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக ரூ.2,10,798/– அளித்துள்ளார்கள். மதிப்பீட்டு தொகையினை விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை அளித்துள்ளதை ஏற்று பொருட்களை கழிவு செய்யவும் மேலும் முன்பணமாக திரு. P.ரகுபதி அவர்கள் இரசீது எண். 092/001/1/22–23/0002070–ன்படி ரூ.14500/– செலுத்தியது போக மீதம் உள்ள இரசீது எண். 092/001/1/22–23/0002462–ன்படி ரூ.1,96,300/– ஐ செலுத்தி உள்ளார். எனவே, உயர்ந்தபட்ச ஏலத்தொகை செலுத்தியுள்ள திரு.P.ரகுபதி அவர்களின் ஏலத்தினை உறுதிசெய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உயர்ந்தபட்ச ஏலத்தினை உறுதி செய்து தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 507/2022/இ2

25) சிதம்பரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் (திடக்கழிவுமேலாண்மை திட்டத்தின்கீழ் திறந்தவெளியில் மலம், ஜலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக பிரகடனம் செய்யப்பட்டது குறித்து பொதுமக்கள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்க கீழ்காணும் நாளிதழில் 04.03.2022 அன்று விளம்பரம் செய்தமைக்கு உரிய பட்டியல் தொகை கீழ்கண்ட விபரப்படி வரப்பட்டுள்ளது. மேற்படி தொகையை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்.	விளம்பரம் நாளிதழ் பெயர்	விளம்பர பட்டியல் எண்.	நாள்	பட்டியல் தொகை ரூ.
1.	தமிழ் முரசு (KAL PUBLICATION PVT. LTD., PONDY)	3300333731	04.03.2022	7201
2.	தமிழ் முரசு (KAL PUBLICATION PVT. LTD., PONDY)	3300333735	04.03.2022	6001
				13,202

127 அழுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

128 அழுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவின தொகை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1782/2015/எச்.1)

129 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

26) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் CompactLorry No.TN 91 B 5126 தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தினை பழுது நீக்கம் செய்திட 13.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்.	பணியின் விபரம்	ஒப்பந்ததாரரின் பெயர் முகவரி	மதிப்பீட்டு தொகை ரூ.	மதிப்பீட்டினை விட குறைவு	மதிப்பீட்டினை விட அதிகம்
1	நகராட்சிக்கு சொந்தமான Compact Lorry No.No.TN 91 B 5126 –க்கு பகுது நீக்கம் செய்து தகுதி சான்று பெறும் பணி	**M/s. விஜயலட்சுமி ஆட்டோமொபைல்ஸ்** ரெ.56, சிட்கோ தொழிற்பேட்டை, செம்மண்டலம், கடலூர் – 607 001.	1,24,000/–	0.00 %	--
2.		**M/s. ஓம் சக்தி இன்ஜினியரிங்க ஒர்க்ஸ்,** D.S.N. நகர், நெல்லிக்குப்பம் மெயின் ரோடு, காராமணிக்குப்பம், கடலூர் – 607 001.		--	4.44 %

அலுவலகக் குறிப்பு : 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் 5–ல் கண்டுள்ளபடி மதிப்பீட்டினை விட 0.00 % குறைவாக மதிப்பீட்டு விலைவிகிதத்தில் கொடுத்துள்ள **M/s. விஜயலட்சுமி ஆட்டோமொபைல்ஸ்** கடலூர் – 607 001 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) பொது சுகாதார நலன் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3) மேற்படி மன்றப் பொருள் நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. எனவே, தற்போது நகர்மன்ற தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று நகர்மன்றத்தின் அனுமதியுடன் தொகையினை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4933/எச்.1/2020)

130 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

27) திரு.சி.ச.சிபிசக்காரவர்த்தி என்பவர் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு–29, கதவு எண்.15A,மன்னார்குடி தெருவில் உள்ள C.P.R.சிவராஜ் அவர்களுக்கு சொந்தமான அடுக்குமாடி கட்டிடம் இந்நகராட்சி ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு மாறாக விதி மீறலாக மாடி குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும் இதனை சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டதில் 8.10.2016 நாளிட்ட தேதியிலும் மற்றும் மேல் முறையீட்டு மனு 13.10.2016–ம் தேதியில் தெரிவித்தும் நடவடிக்கை ஏதும் இல்லாத நிலையில்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனு எண்.1053/2016/ந-ல் வழக்கு பதிவாகி ஆணை எண்.171/2017 நாள்.23/06/2017ல் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு ஆணை பிறப்பிக்கப்படுள்ளது. இதனடிப்படையில் செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் நேரடி ஆய்வு செய்து பார்வை 2ல் காணும் கடிதம் வாயிலாக கீழ்காணும் விசாரணை அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்கள்.

இக்கட்டிடத்திற்கு 19.02.2010ல் வரிவிதிப்பு எண்.13885ல் 2034 சதுர அடிக்கு அரையாண்டு வரியாக ரூ.5206/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தை நேரிடையாக ஆய்வு செய்ததில் கட்டிடத்தின் அளவு 6361 சதுர அடியாக உள்ளது. அதன்பேரில் நகராட்சி ஆணையருக்கு தற்போது உள்ள கட்டிடத்தின் பரப்பளவிற்கு வரிவிதிப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டு 01.10.2009 முதல் முன் தேதியிட்டு ஒரு அரையாண்டிற்கு ரூ.14,274/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது 01.10.2009 முதல் இது வரை நகராட்சிக்கு ரூ.1,54,156/- இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தொகையை உடனே வசூல் செய்ய நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது."

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் அறிவுறுத்தலின்படி சிதம்பரம் நகராட்சி ஆணைய அறிவிக்கை வாயிலாக சொத்துவரி திருத்தம் செய்து மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கி பழைய சொத்துவரி எண் 092/13885 (புதிய வரிவிதிப்பு எண்.092/029/00083)க்கு வரிதிருத்தம் செய்து அரையாண்டு வரியாக ரூ.15113/- என நிர்ணயம் செய்து, 2009-10 II முதல் 2017-18 II வரை மொத்தம் ரூ.1,78,831/- (வரிவிதிப்பு எண்.092/029/00332க்கான கேட்பு அறிவிப்பு நாள்.21.1.2018) என நிர்ணயம் செய்து அளித்தன்படி, மனுதாரரால் வரித்தொகை சொலுத்து சீட்டு செலாண்கள் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது வரிவிதிப்புதாரர் C.P.R.சிவராஜ் அவர்களுக்கு சொந்தமான 15A, மன்னார்குடி தெருவில் உள்ள சொத்திற்கான திருத்தம் செய்யப்பட்ட வரிவிதிப்பு எண்.092/029/00332 க்கான வரித்தொகை நாளது தேதி வரை நிலுவை ஏதுமின்றி செலுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்படி திருத்தம் செய்யப்பட்ட சொத்துவரியின் பழைய சொத்துவரி எண்.092/13885 (புதிய வரி விதிப்பு எண்.092/029/00083) ரத்து செய்யப்படாமல் 2017-18 முதல் 2021-22 வரை சொத்துவரி ரூ.52060 மற்றும் SUC ரூ.3135/- மொத்தம் ரூ.55195/- தொடர்ந்து கேட்பில் வருகிறது. இவ்வரிவிதிப்பை ரத்து செய்திடலாம்.

மேலும், வார்டு 29 கதவு எண்.15A மன்னார்குடி ரோடு தெருவில் உள்ள C.P.R.சிவராஜ் அவர்களுக்கு 01/10/1998 முதல் ஒரு அரையாண்டிற்கு ரூ.14274/- (சொத்துவரி எண்.092/029/00330) என வரி நிர்ணயம் செய்யப்பட்டு மற்றொரு கேட்பு கணினியில் வரப்பெற்றுள்ளது. 1998-99 முதல் 2021-22 வரை ரூ.674013/- நிலுவை இருப்பதாக கணினியில் உள்ளது. இக்கோப்பினை பரிசீலிக்கும் போது, 15A, மன்னார்குடி தெருவில் C.P.R.சிவராஜ் அவர்களுக்கு சொந்தமான கட்டப்பட்ட இக்கட்டிடம் 2009-10ல் கட்டப்பட்ட (கட்டிட வரைபட அனுமதி நகலின்படி) கட்டிடமாகும். இந்நிலையில் 1998-99 முதல் கேட்பு எழுப்பட்டு அரையாண்டு வரியாக ரூ.14,274 நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது தொடர்பாக புலவிசாரணை மேற்கொண்டுள்ளதில் தெரியவருகிறது.

மேலும் 15A, மன்னார்குடி தெருவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் 9 குடியிருப்பு உள்ளது. ஆனால் மொத்த கட்டிடத்திற்கும் ஒரே வரிவிதிப்பு மட்டும் உள்ளதால் மேற்படி இடத்திற்கு தனிதனியே வரிவிதிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பழைய வரியினை நீக்கம் செய்யவும் மற்றும் 9 குடியிருப்புகள் தனித்தனியே வரிவிதித்திடவும் தவறுதலாக எழுப்பப்பட்ட சொத்துவரி கேட்பு எண்.092/029/00330 -யை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1197/2022/அ2

28) திரு.சி.ச.சிபிசக்கரவர்த்தி என்பவர் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு-29 கதவு எண்.12, சோமசுந்தரம் தெரு மற்றும் வார்டு-19, கதவு எண்.15A,மன்னார்குடி தெருவில் உள்ள அடுக்குமாடி கட்டிடம் இந்நகராட்சி ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு மாறாக விதி மீறலாக மாடி குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும் இதனை சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டதில் 8.10.2016 நாளிட்ட தேதியிலும் மற்றும் மேல் முறையீட்டு மனு 13.10.2016-ம் தேதியில் தெரிவித்தும் நடவடிக்கை ஏதும் இல்லாத நிலையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனு எண்.1053/2016/ந-ல் வழக்கு பதிவாகி ஆணை எண்.171/2017 நாள்.23/06/2017ல் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு ஆணை பிறப்பிக்கப்படுள்ளது. இதனடிப்படையில் செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் நேரடி ஆய்வு செய்து அவர் அறிவுறுத்தலின்படி சிதம்பரம் நகராட்சி ஆணைய அறிவிக்கை வாயிலாக சொத்துவரி திருத்தம் செய்து மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கி பழைய

131 அழிவாக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

சொத்துவரி எண் 092/13884 (புதிய வரிவிதிப்பு எண்.092/029/00147)க்கு வரிதிருத்தம் செய்து அரையாண்டு வரியாக ரூ.11826/– என நிர்ணயம் செய்து, 2009–2010-II முதல் 2017–2018-II வரை (வரிவிதிப்பு எண்.092/029/00331க்கான கேட்பு அறிவிப்பு நாள்.21.1.2018) என நிர்ணயம் செய்து அளித்தன்படி, மனுதாரரால் வரித்தொகை சொலுத்து சீட்டு செலாண்கள் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது வரிவிதிப்புதாரர் P.S.சபாரத்தினம் அவர்களுக்கு சொந்தமான 12, சோமசுந்தரம் தெருவில் உள்ள சொத்திற்கான திருத்தம் செய்யப்பட்ட வரிவிதிப்பு எண்.092/029/00331க்கான வரித்தொகை நாளது தேதி வரை நிலுவை ஏதுமின்றி செலுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்படி திருத்தம் செய்யப்பட்ட சொத்துவரியின் பழைய சொத்துவரி எண்.092/13884 (புதிய வரி விதிப்பு எண்.092/029/00147) ரத்து செய்யப்படாமல் 2017–18 முதல் 2021–22 வரை சொத்துவரி ரூ.118260 மற்றும் SUC ரூ.3135/– மொத்தம் ரூ.121395/– தொடர்ந்து கேட்பில் வருகிறது. இவ்வரிவிதிப்பை ரத்து செய்திடலாம்.

மேலும், கள ஆய்வில் 12, சோமசுந்தரம் தெருவில் உள்ள குடியிருப்பு ஒரே வரி விதிப்பில் உள்ளது. ஆனால் இக்கட்டிடத்தில் 13 குடியிருப்புகள் தனித்தனியே உள்ளது என்பதால், ஒரே வரி விதிப்பிற்கு பதிலாக தனித்தனி வரிவிதிப்புகள் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பழைய வரியினை நீக்கம் செய்யவும் மற்றும் 13 குடியிருப்புகள் தனித்தனியே வரிவிதிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1197/2022/அ2

29) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.76/2018/அ3, நாள் 30.11.2020–ம் நாளிட்ட கடிதத்தில், மறைமலை நகர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த திருமதி க.செங்கேணி என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக சிதம்பரம் நகராட்சிக்கு பணி மாறுதல் கோரியுள்ளதாகவும், மேற்கண்ட பணி மாறுதலுக்கு ஆட்சேபனை இல்லை என்பதற்கான நகர்மன்றத்தின் இசைவினை அளித்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைக்க கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3342/2021/எச்.1)

K.R. சுந்தரமூர்த்தி

நகர்மன்ற தலைவர்,
சிதம்பரம்

இடம் : சிதம்பரம்
நாள் : 25.07.2022.

132 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

K.R. சுந்தரமூர்த்தி

சிதம்பரம் நகராட்சி

2022 ம் ஆண்டு ஆடி திங்கள் 13–ம் நாள் 29.07.2022 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும் – அவசர நகர்மன்ற கூட்டம்

மன்றக்கூட்டப் பொருள்

1) சிதம்பரம் நகராட்சியில் சமூக நலம் 75-வது சுதந்திர தினம் பாரதப்பிரதமர் அவகளின் அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி திட்டம் சுதந்திரத்திருநாள் அமுதப்பெருவிழா அனைத்து வீடுகளுக்கும் தேசிய கொடி தைத்து கொடிவிநியோகம் செய்திட சிதம்பரம் மகளிர் தையல் தொழிற்கூட்டுறவு சங்கத்திற்கு தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ.300000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ள மன்றப்பொருள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2097/2022/சி1

2) சிதம்பரம் நகராட்சியில் 21-வது வார்டுக்குட்பட்ட பகுதியில் கொத்தங்குடி நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்திற்குள் பொதுமக்களுக்காக கட்டப்பட்ட கழிப்பறை உள்ளது. இக்கழிப்பறை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு சுமார் 20 வருடங்களுக்கு மேல் ஆவதால், மேற்படி பொதுமக்கள் பயன்படுத்த இயலாத வகையில் மிகவும் சிதலமடைந்துள்ளது. இதனை இடித்து அப்புறப்படுத்த பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் சம்பந்தப்பட் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோரிடமிருந்து கோரிக்கை வரப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் சிதலமடைந்து இருப்பதாலும் பள்ளி வளாகத்திற்குள் உள்ளதால் மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி மேற்படி கழிப்பறை கட்டிடத்தை பொது ஏலம் விட்டு இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் /2022/இ1

133 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

134 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6 தில்லைகாளியம்மன் கோவிலுக்கு செல்லும் சாலையின் கிழக்கு பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் வழிந்தோடி தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் சிதலமடைந்து சேதமடைந்துள்ளது. இதனால் தார் சாலைப்பகுதியில் பள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு சிரமமாகவும், விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே இதனை தவிர்க்கும்பொருட்டு பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலத்திற்கு முன் சேதமடைந்த பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சாலையினை விரைந்து சீரமைக்கப்பட வேண்டிய நிலை உள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மழைநீர் வடிகால் மற்றும் சாலை பேட்ச் பணி மேற்கொள்ள தோராய மதிப்பீடு ரூ.1,25,000/-க்கும் செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2022/இ1

4) சிதம்பரம் நகராட்சியின் புதிய வார்டு எண். 28, எடத்தெருவில் உள்ள பழைய புதைவடிகால் கழிவு நீரேற்றும் நிலையம் 1966-ல் கட்டப்பட்டதாகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புதிய புதைவடிகால் திட்டம் செயல்பட்டில் உள்ளதால், மேற்படி இடம் பயன்பாடின்றி முட்புதர்கள் வளர்ந்து சிதலமடைந்து உள்ளது. மேற்படி இடத்தில் கிழக்கு பகுதியின் ஓரத்தில் 15-th Finance Grant - CGF - 2021-22-ன் கீழ் 25.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரோக்கியம் மையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டிடத்தின் தெற்குபகுதியில் பயன்படுத்தும் வகையில் பழைய பாதாள சாக்கடை திட்டத்திற்காக அமைக்கப்பட்ட, தற்பொழுது பயன்பாட்டில் இல்லாத மோட்டார் அறையை இடித்து அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவும், மீதமுள்ள நகராட்சி இடத்தை வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தும் வகையில் தனியாக பிரித்து சுற்றுச்சுவர் (Compound wall) மற்றும் புதியகேட் அமைத்து ஒரு கழிவுநீர் கிணற்றை மூடவும் தோராய மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2022/இ1

5) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 33-ல் இரயில்வே லைன் குடியிருப்பு பகுதியில் இரயில்வே பாதைக்கு மிக அருகாமையில் உள்ளதால் மின்வாரிய

135 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

136 நகர்மன்ற தி.மு.க. கொறடா திரு. த. சேம்ஸ்விஜயராகவன் அவர்கள் மேற்படி பொருளில் காணும் பழைய புதைவடிகால் கழிவு நீரேற்று நிலையத்தில் தற்பொழுது பயன்பாட்டில் இல்லாத மோட்டார் அறையை இடிக்கும் போது, மேற்படி அறையில் உள்ள மின் மோட்டார், பம்ப், சாப்ட் உள்ளிட்ட பொருட்களை பத்திரப்படுத்தி அதற்கான இருப்பு பதிவேட்டில் முறைப்படி பதிவு செய்து உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்க கோரியுள்ளார். இதனை ஏற்று அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

மின்கம்பம் அமைத்து தெருவிளக்குகள் அமைக்க இயலாது. 40 குடும்பங்களுக்கு மேல் குடியிருந்து வரும் இப்பகுதியின் அணுகு சாலையில் தெருவிளக்கு வசதியின்றி பொதுமக்களின் இரவு நேர போக்குவரத்துக்கு சிரமமாக உள்ளதால் 2 எண்கள் சோலார் விளக்குகள் அமைத்து தரவும், இந்திரா நகர் விளாந்திர மேட்டில் ஏற்கனவே உள்ள மின்வாரிய மின்கம்பத்தில் புதியதாக மின்கம்பி அமைத்து ஒரு தெருவிளக்கு அமைத்து தர நகர்மன்ற துணைதலைவர் மற்றும் பொதுமக்கள் கோரியுள்ளார்கள். பொதுமக்களின் நலன் கருதி இப்பணிகளுக்கான செலவினத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மதிப்பீடு செலவினம் ரூ. 40,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2022/இ1

6) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5 புளியந்தோப்பு மற்றும் சத்யா நகர் பகுதிகளில் பழைய புதைவடிகால் திட்ட கழிவு நீர் சேகரிப்பு முறையில் சதுர வடிவ ஆய்வுக்குழிகள் மற்றும் RCC மேல் மூடிகள் அமைக்கப்பட்டு கழிவுநீர் சேகரிப்பு பணி நடைபெற்று வருகின்றன. இப்பணியில் இயற்கை இடர்பாடு காரணமாகவும், மிகுதியான பளுவுடன் கூடிய டிராக்டர்களின் போக்குவரத்து அழுத்ததின் காரணமாக RCC மேல்மூடிகள் மற்றும் ஆய்வுக்குழகளின் பக்கவாட்டு சுவர்கள் 10 எண்கள் பழுதாகி போக்குவரத்துக்கு பாதுகாப்பற்ற தன்மையில் உள்ளன. பொதுமக்களின் போக்குவரத்து நலன் கருதி பழுதடைந்த 10 எண்கள் ஆய்வுக்குழிகளை சீரமைத்து வேண்டியது அவசர அவசியமாகும். இப்பணியை மேற்கொள்ளவும் இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.70,000/- ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். /2022/இ1

7) சிதம்பரம் நகராட்சி மேலரதவீதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் அமைந்துள்ள நகர ஒலிப்பான் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்கண்ட நகர ஒலிப்பானை சீர்செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவேண்டும் என நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களால் கோரிக்கை வைக்கப்பட்டது. எனவே மேற்கண்ட நகர

137 அழுவலக குறிப்பு அங்கீகரிக்கம்பட்டது.

138 அழுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

139 அழுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஒலிப்யானை பழுது நீக்கம் செய்து சீரமைத்திட உத்தேச மதிப்பீடு ரூ.1,98,000/– ஆகும். இப்பணியினை செய்திடவும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

8) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய 11.05.2022 அன்று **வருவாய் நிதி (Revenue Fund) 2021–22** ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

வ. எண்.	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்	மதிப்பீட்டு தொகை ரூ.	ஒப்பந்த சதவீதம் குறைவு	ஒப்பந்த சதவீதம் அதிகம்
1	2	3	4	5	6
	வருவாய் நிதி (Revenue Fund) 2021–22				
1	இந்நகராட்சி வடக்கு மெயின்ரோடு அம்பேத்கார் நகரில், துப்புரவு பணியாளர் குடியிருப்பில் கூடுதல் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பதாக, முதல் தளம் அமைக்கும் பணி (மீதமுள்ள பணிகள்)	திருமதி.கே.முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர், பணங்காடு.	3,15,000/–	––	மதிப்பீட்டு விலையை விட (+)35.11 % அதிகம்
		திரு.கே.வடிவேல், ஒப்பந்ததாரர், சிதம்பரம்.		––	மதிப்பீட்டு விலையை விட (+)35.36 % அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.6–ல் கண்டுள்ளபடி (+) 35.11% மதிப்பீட்டு விலையைவிட அதிகத்தில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி நடப்பாண்டு (2021–22) விலை விகிதத்தின் மதிப்பீட்டை ஒப்பிடும்போது மதிப்பீட்டைவிட (–) 0.06% குறைவாக கொடுத்துள்ள திருமதி.கே.முத்துலட்சுமி, என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திருமதி.கே.முத்துலட்சுமி,** என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3) 2017–18 விலைவிகித மதிப்பீட்டைவிட கூடுதலான செலவினத்தொகையை இப்பணியினை முன்பு செய்திட்ட திரு.எஸ்.கே.விஜயராஜ் ஒப்பந்ததாருக்கு வழங்க வேண்டிய தொகை/வைப்பு தொகையிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4785/2022/இ1

9) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய 11.05.2022 அன்று **வருவாய் நிதி (Revenue Fund) 2021–22** ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

வ. எண்.	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்	மதிப்பீட்டு தொகை ரூ.	ஒப்பந்த சதவீதம் குறைவு	ஒப்பந்த சதவீதம் அதிகம்
1	2	3	4	5	6

140 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

141 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

	வருவாய் நிதி (Revenue Fund) 2021–22				
	இந்நகராட்சியில் வடக்குமெயின் ரோட்டில் கட்டப்பட்டுள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்புக்கு சுற்றுச் சுவர் மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணி (மீதமுள்ள பணிகள்)	**திருமதி.கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு.	9,20,000/–	––	மதிப்பீட்டு விலையை விட 24.31% அதிகம்
		திரு.கே.வடிவேல், ஒப்பந்ததாரர், சிதம்பரம்.		––	மதிப்பீட்டு விலையை விட 24.96% அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.6–ல் கண்டுள்ளபடி 24.31% மதிப்பீட்டு விலையைவிட அதிகத்தில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி நடப்பாண்டு (2021–22) விலை விகிதத்தின் மதிப்பீட்டை ஒப்பிடும்போது மதிப்பீட்டைவிட (–) 0.23 % குறைவாக கொடுத்துள்ள **திருமதி.கே.முத்துலட்சுமி,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திருமதி.கே.முத்துலட்சுமி,** என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3) 2017–18 விலைவிகித மதிப்பீட்டைவிட கூடுதலான செலவினத்தொகையை இப்பணியினை முன்பு செய்திட்ட திரு.எஸ்.கே.விஜயராஜ் ஒப்பந்ததாருக்கு வழங்க வேண்டிய தொகை/வைப்பு தொகையிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4785/2022/இ1

10) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய 11.05.2022 அன்று **வருவாய் நிதி (Revenue Fund) 2021–22** ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

வ. எண்.	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்	மதிப்பீட்டு தொகை ரூ.	ஒப்பந்த சதவீதம் குறைவு	ஒப்பந்த சதவீதம் அதிகம்
1	2	3	4	5	6
	வருவாய் நிதி (Revenue Fund) 2021–22				
	துப்புரவு பணியாளர் குடியிருப்புக்கு குடிநீர், கழிவுநீர் குழாய்கள்அமைத்தல் மற்றும் மின் பணிகள்செயதுதரும் பணி (மீதமுள்ள பணிகள்)	**திருமதி.கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு.	9,00,000/–	––	மதிப்பீட்டு விலையை விட 11.44 % அதிகம்
		திரு.கே.வடிவேல், ஒப்பந்ததாரர், சிதம்பரம்.		––	மதிப்பீட்டு விலையை விட 18.03 % அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி (+)11.44% மதிப்பீட்டு விலையைவிட அதிகத்தில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி நடப்பாண்டு (2021–22) விலை விகிதத்தின் மதிப்பீட்டை ஒப்பிடும்போது மதிப்பீட்டைவிட (–)0.24% குறைவாக கொடுத்துள்ள **திருமதி.கே.முத்துலட்சுமி,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திருமதி.கே.முத்துலட்சுமி,** என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்

142 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3) 2017–18 விலைவிகித மதிப்பீட்டைவிட கூடுதலான செலவினத்தொகையை இப்பணியினை முன்பு செய்திட்ட திரு.எஸ்.கே.விஜயராஜ் ஒப்பந்ததாருக்கு வழங்க வேண்டிய தொகை/வைப்பு தொகையிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4785/2022/இ1

11) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய **16.06.2022** அன்று **வருவாய் நிதி 2022–23**–ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

வ. எண்.	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்	மதிப்பீட்டு தொகை ரூ.	ஒப்பந்த சதவீதம் குறைவு	ஒப்பந்த சதவீதம் அதிகம்
1	2	3	4	5	6
	வருவாய் நிதி 2022–23				
	சிதம்பரம் நகர ஒலிப்பான் பழுது நீக்கும் பணி.	M/s.Balan Electrical Works, No. 10/2, Vellapirandhan Street, Chidambaram.	1,98,000/–	மதிப்பீட்டு விலையை விட 0.19 % குறைவு	
		M/s. J.P Electrical Work, Vadalore.		––	மதிப்பீட்டு விலையை விட 0.59 ரூ அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி 0.19% மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Balan Electrical Works, No. 10/2, Vellapirandhan Street, Chidambaram, என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Balan Electrical Works, No. 10/2, Vellapirandhan Street, Chidambaram, என்ற நிறுவனத்தாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

K.R. பழனிவேல்

நகர்மன்ற தலைவர்,
சிதம்பரம்

இடம் : சிதம்பரம்
நாள் : 25.07.2022.

143 அனுமதிக்க தீர்ப்பு அங்கீகரிக்கப்பட்டது.

K.R. பழனிவேல்